இதுவரை ரூ.6 கோடியே 21 இலட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது!

2012 ஜூன் மாதம் முதல் உதவித் தொகை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும்

2013 ஆகஸ்ட் மாதத்திலிருந்து ரூ. 25 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது!

# கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில்

# நலிந்தோர் - மருத்துவம் உதவி நிதியாக

# இன்று ரூ.2,00,000/- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளைக்காக, தலைவர் கலைஞர் அவர்கள் தனது சொந்த பொறுப்பில் அளித்த ஐந்து கோடி ரூபாயினை வங்கியில் வைப்பு நிதியாக போடப்பட்டு, அதில் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு, மாதந்தோறும் ஏழை எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகையாக 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப்பட்டு வருகிறது.

வைப்பு நிதியாக போடப்பட்ட ஐந்து கோடி ரூபாயில், 30வது புத்தகக் கண்காட்சியினை 10.1.2007 அன்று திறந்து வைத்து தலைவர் கலைஞர் பேசுகையில், கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர் – பதிப்பாளர் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என அறிவித்து அச்சங்கத்துக்கு வழங்கியது போக மீதமுள்ள நான்கு கோடி ரூபாயிலிருந்து வரும் வட்டித் தொகையில் 2007 பிப்ரவரி முதல் தொடர்ந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2005 நவம்பர் முதல் இதுவரை வழங்கிய நிதி **ரூ. 6 கோடியே 21 லட்சத்து 90 ஆயிரம்.** இந்த மாதம் நலிந்தோர் மற்றும் மருத்துவம் உதவி நிதியாக மொத்தம் **8** பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் **ரூ.2,00,000/- (இரண்டு லட்சம்)** 10–04–2025 அன்று கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** வழங்கினார். நிதி பெறுவோர் வெளி மாவட்டங்களிலிருந்து வந்துபோகிற செலவினத்தைத் தவிர்ப்பதற்காக தபால் மூலம் வரைவுக் காசோலையாக அனுப்பப்படுகிறது.

## நிதி உதவி பெறுவோர் விவரம்

| | | |
|---|---|---|
| 1. | எஸ்.கணேசன்,நாட்டுபுற கலைஞர், நடுஹட்டி கிராமம், குண்டடா, கோத்தகிரி | 25,000/– |
| 2. | பெ.முரளிசங்கர், வெங்கக்கல்பட்டி, தாந்தோணிமலை, கரூர் மாவட்டம். | 25,000/– |
| 3. | செல்வி து.அன்புகுறி, இலந்தங்குடி தெரு, கண்டராதித்தம் கிராமம், அரியலூர் | 25,000/– |
| 4. | அ.அப்துல்சலாம், கடியச்சேரி, பள்ளங்கோவில், கொத்தமங்கலம், திருவாரூர் | 25,000/– |
| 5. | வீ.பரசுராமன், மேலத் தெரு,ஒக்கூர் அஞ்சல், வெங்கிடங்கால், நாகை | 25,000/– |
| 6. | க.கணேசன், முடச்சிக்காடு தெற்கு, பேராவூரணி வட்டம், தஞ்சை மாவட்டம். | 25,000/– |
| 7. | ஏ.கே.அண்ணாமலை, அழகப்பசமுத்திரம், அரசடிக்குப்பம், பண்ருட்டி, கடலூர் | 25,000/– |
| 8. | ம.தனசேகரன், இராதாபுரம் கிராமம்– அஞ்சல், விக்கிரவாண்டி, விழுப்புரம் | 25,000/– |
| | **மொத்தம்** | **ரூ.2,00,000/-** |



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை அவரது முகாம் அலுவலகத்தில் கழக இலக்கிய அணி பொருளாளர் அரிமா நா.சந்திரபாபு தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்து பெற்றார்.

## மீனவப் பெருமக்களுக்கு பல்வேறு திட்டங்களை அறிவித்த –

# தாயுள்ளம் கொண்ட முதல்வரை மீனவர்கள் நன்றியோடு வாழ்த்துவார்கள்!

## சட்டப்பேரவையில் இராமநாதபுரம் – காதர்பாட்சா முத்துராமலிங்கம் பேச்சு!

*சென்னை, ஏப்.11-*

*சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மீனவர் பெருமக்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை விதி 110-ன் கீழ் அறிவித்ததற்கு நன்றி தெரிவித்து இராமநாதபுரம் தொகுதி உறுப்பினர் காதர் பாட்சா முத்துராமலிங்கம் பேசியதாவது:-*



**காதர்பாட்சா முத்துராமலிங்கம்:** இந்திய ஒன்றிய அரசு எந்தவொரு நன்மையையும் பாரம்பரிய மீனவர்களுக்குச் செய்யவில்லையென்றால் என்ன! ‘நான் இருக்கிறேன்’ என்று சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய திராவிட மாடல் முதலமைச்சர் அவர்கள் மகத்தான திட்டங்களை விதி 110 ன்கீழ் தந்தமைக்கு இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதியின் உறுப்பினர் என்கிற முறையில் முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கழக அரசு அமைந்ததிலிருந்து இன்றுவரை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மீனவப் பெருங்குடி மக்களுக்கு என்னென்னவற்றையெல்லாம் செய்திருக்கிறார்கள் என்பதில் சிலவற்றை நான் இந்த மாபெரும் அவையிலே பதிவு செய்ய வேண்டுமென்று விரும்புகிறேன்.

இலங்கை அரசு 2018-ஆம் ஆண்டு நம்முடைய தமிழக மீனவர்களுடைய விசைப் படகுகளையும், நாட்டுப் படகுகளையும் நாட்டுடமையாக்கப்பட்ட பின்பு, 2018-ஆம் ஆண்டிலிருந்து 2021-ஆம் ஆண்டு வரை இருக்கக்கூடிய, ஏறத்தாழ 155 விசைப் படகு மீனவர்கள் என்னிடத்திலே கோரிக்கைகள் வைக்கின்றார்கள்; முதலமைச்சர் அவர்களிடத்திலே அந்தத் தகவல் வருகிறது; அவர்களை அழைத்து வந்து முதல்முறையாக முதலமைச்சர் அவர்களைச் சந்திக்கின்றோம். சந்திக்கிறபோது அவர்கள் எங்களுக்கு, நாட்டுடமையாக்கப்பட்ட படகுகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டுமென்று முதலமைச்சர் அவர்களிடத்திலே கூறியவுடன், 5 இலட்சம் ரூபாய் 155 படகுகளுக்கும் வழங்கி அவர்களுடைய வாழ்விலே ஒளியேற்றி வைத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதைப்போன்று, தொடந்து 4 முறை நம்முடைய மீனவப் பிரதிநிதிகள் முதலமைச்சர் அவர்களைச் சந்தித்திருக்கின்றார்கள். இந்தியாவில் எந்தவொரு முதலமைச்சரும் செய்திராத அளவிலே, மீனவருக்கென்று தனி ஒரு மாநாட்டை இராமநாதபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மண்டபத்திலே நடத்தி, (மேசையைத் தட்டும் ஒலி) ஏறத்தாழ 960 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு திட்டங்களை அவர்களுக்கு தந்திருக்கின்றார்கள்.

இங்கே பேசிய மாமன்ற உறுப்பினர்களெல்லாம் தங்கள் தலைவர்கள் கொண்டு வந்த திட்டங்களையும், தங்கள் ஆட்சிக் காலத்தில் செய்தவற்றையெல்லாம் சொன்னார்கள். நான், இந்த 4 ஆண்டுக் காலத்தில் முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றிய பல்வேறு திட்டங்களில் சிலவற்றை இந்த அவைக்கு எடுத்துச் சொல்ல வேண்டுமென்று நினைக்கின்றேன்.

17.8.2023-ஆம் நாளன்று, இராமநாதபுரத்திற்கு முதலமைச்சர் அவர்கள் வருகை தந்தார். அப்போது மீனவர் நல மாநாட்டில் பங்கேற்பதற்காக இராமேஸ்வரத்திற்கு இரவு நேரத்தில் சென்று கொண்டிருந்தபோது, அக்காமடம் என்ற பகுதியிலுள்ள மீனவர் குடியிருப்புப் பகுதிக்குச் சென்றார்.

சாலை வழியாகச் சென்றபோது, வழியில் இறங்கி, அருகிலுள்ள நிரஞ்சன் என்கிற ஒரு மீனவரின் வீட்டிற்குச் சென்றார். அந்த மீனவர் முதல்வரின் வருகையை எதிர்பார்க்கவில்லை. அவர் தனது மனைவி மற்றும் குழந்தைகளுடன் இருந்தார். முதலமைச்சர் அவர்கள், மீனவரின் வீட்டிற்குள் நுழைந்தவுடன், அவர்கள் ஆரத் தழுவி முதலமைச்சர் அவர்களை வரவேற்றார்கள். அவரை அமர வைப்பதற்கு அவர்கள் வீட்டில் இருக்கைகூட இல்லை. உங்களை அமர வைக்க எங்கள் வீட்டில் இருக்கை இல்லை ஐயா என்று சொன்னவுடன், ஒரு நாற்காலியை எடுத்து வந்து, அதில் நம்முடைய முதலமைச்சர் அவர்களை அமர வைத்தார்கள்.

ஏதாவது சாப்பிடுங்கள் என்று அந்த மீனவப் பெண் சொன்னார். உங்கள் வீட்டில் என்ன இருக்கிறதோ, அதைக் கொடுங்கள் என்று முதலமைச்சர் அவர்கள் கேட்டபோது, அந்த மீனவரின் இல்லத்திலுள்ள குடத்திலிருந்து ஒரு டம்ளர் தண்ணீரைக் எடுத்து கொடுத்தார். அதை வாங்கி அருந்திய முதலமைச்சர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதாவது, அவர்களுடைய உணர்வுகளுக்கு மதிப்பளித்தார். அப்போது, அவர்களிடத்தில், உங்களுக்கு என்ன வேண்டுமென்று கேட்டபோது, எங்களைப் போன்ற ஆயிரக்கணக்கான மீனவர்கள் வசிக்க வீடின்றி இருக்கிறோம். நீங்கள் எங்களுக்கு நிலம் தந்து, பட்டாவும் தர வேண்டும் என்று சொன்னவுடன், அதையேற்று, மறுநாள் நடந்த மீனவர் நல மாநாட்டிலேயே தீவுப் பகுதியில் வாழக்கூடிய ஏறத்தாழ ஆயிரம் மீனவர்களுக்கு பட்டா வழங்கிய முதலமைச்சர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இது மட்டுமா! தீவுப் பகுதியில் கணவனை இழந்த பெண்கள் அதிகமாக வாழ்கின்றனர். அவர்களின் சார்பாக அந்த மாநாட்டில் ஒரு பெண்மணி பேசினார். அப்போது அவர் பல்வேறு கோரிக்கைகளை வைத்தார். அந்தக் கோரிக்கைகளை முழுவதுமாக உள்வாங்கிய நமது முதலமைச்சர் அவர்கள், அந்தப் பெண்களுக்கான பல்வேறு திட்டங்களை தற்போது தந்திருக்கின்றார்கள். அதற்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். 4 முறை மீனவர்களைச் சந்தித்த நம்முடைய முதலமைச்சர் அவர்கள், 4 முறையும் ஒவ்வொரு திட்டத்தை அரசின் சார்பில் அறிவித்திருக்கின்றார்.

அதற்கு உதாரணம், இலங்கைக் கடற்படையால் பறிமுதல் செய்யப்பட்ட படகுகளுக்கான இழப்பீட்டுத் தொகை 5 இலட்சம் ரூபாய் என்றிருந்ததை, தற்போது 8 இலட்சம் ரூபாயாக உயர்த்தித் தந்திருக்கிறார்கள். இது மட்டுமல்ல, குறிப்பாக, தற்போது அறிவித்திருக்கக்கூடிய பல்வேறு திட்டங்களுக்கும், வார்த்தைகளால் நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்லலாம். ஆனால், நம்முடைய முதலமைச்சர் அவர்களிடம் மீனவர்கள் வாழ்வியலில் நன்றியுணர்வோடு வாழ்வார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனெனில், அவர்களின் வாழ்வியலில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இருக்கின்றார்கள். தாயுள்ளம்கொண்ட நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.




கலைஞர் 100 1924 - 2023

## தி.மு.க. இளைஞர் அணி

### சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 1–இல், ஐந்து சட்டமன்றத் தொகுதிகளுக்கும் மண்டலம் 9–இல், இரண்டு சட்டமன்றத் தொகுதிகளுக்கும் சமூக வலைத்தளப் பயிற்சி, கீழ்க்காணும் நாட்களில் நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | மண்டலம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|---|
| 12.04.2025 சனிக்கிழமை | மாலை 4.00 மணி | 1 | தியாகராய நகர் | ஆதித் ஹால், முத்துரங்கன் சாலை, தியாகராய நகர் |
| 13.04.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 10.00 மணி | | மயிலாப்பூர் | மகிழ் ஹால், சிருங்கேரி மடம் சாலை, ஆர்.ஏ.புரம், மயிலாப்பூர் |
| 19.04.2025 சனிக்கிழமை | மாலை 4.00 மணி | | அண்ணா நகர் | அண்ணா நகர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம், பூந்தமல்லி நெடுஞ்சாலை, அமைந்தக்கரை |
| 19.04.2025 சனிக்கிழமை | காலை 10.00 மணி | 9 | தூத்துக்குடி | கலைஞர் அரங்கம், தூத்துக்குடி |
| 19.04.2025 சனிக்கிழமை | மாலை 4.00 மணி | | கோவில்பட்டி | சௌபாக்கியா மஹால், கோவில்பட்டி |

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 02-04-2025

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி





கலைஞர் 100 1924 - 2023

## தி.மு.க. இளைஞர் அணி

### ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்புகளுக்கு, இளைஞர் அணி அமைப்பாளர்–துணை அமைப்பாளர்களை, மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாவட்ட வாரியாக நியமித்து வருகிறார்.

சென்னை வடக்கு, தருமபுரி கிழக்கு, தருமபுரி மேற்கு, நாமக்கல் கிழக்கு, நாமக்கல் மேற்கு, ஈரோடு வடக்கு மற்றும் சேலம் கிழக்கு ஆகிய மாவட்டங்களில் நியமிக்கப்பட்ட இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், அந்தந்த மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 12.04.2025 சனிக்கிழமை | காலை 9.00 மணி | சேலம் கிழக்கு | தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயம், கழக அலுவலகம், வாழப்பாடி. |

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 06-04-2025

